(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 241.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 திசெம்பர் 05, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1521/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கையிலுள்ள தொழிற்சார் விமானிகள் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறான நிறுவனங்களின் பெயர்களையும்;

(iii) இலங்கையில் விமானம் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்படும் சராசரி செலவினத்தையும்;

(iv) இலங்கைக்கு அவசியமான விமானிகளின் எண்ணிக்கையையும்;

(v) பயிற்றப்பட்ட, ஆனால் இலங்கையில் விமானியாக சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத எஞ்சிய மாணவர்களின் பின்விளைவையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1950/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தின் ஒயாமடுவ பிரதேசத்தில் நடைபெற்ற "தயட்ட கிருல" தேசிய கண்காட்சியுடன் இணைந்ததாக ரஜரட்ட பிரதேசத்தின் 15 ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்று நடைபெற்றதென்பதையும்;

(ii) வீடு பெறுநர்களைத் தெரிவு செய்கின்றபோது பகிரங்கத் தன்மையற்ற விதத்தில் செயலாற்றியுள்ளதாக ஊடகவியலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை வழங்குகின்றபோது அநீதி ஏதும் இடம்பெற்றிருப்பின் அந்நிலைமையை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமெனில், அதற்காக பயன்படுத்தப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2363/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள திஸ்ஸமஹாராம வைத்தியசாலையில்,

(i) சத்திரசிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, எக்ஸ் கதிர் பிரிவு மற்றும் ஆய்வுகூட வசதிகள் தாபிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஈ.சீ.ஜீ. பெறுவதற்கான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் இருக்கின்றனவா;

(iii) கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டு அதற்கான அவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) சத்திரசிகிச்சைக் கூடங்கள் போன்ற தனித்துவமான கூறுகள் வளிச்சீராக்கம் செய்யப்பட்டுள்ளனவா;

(v) போதுமான அளவு உபகரணங்களும் மருந்துப் பொருட்களும் உள்ளனவா;

(vi) சுத்தம் பேணும் பொருட்டு சுற்றாடலை வகுத்தமைத்து அதற்கு அவசியமான வடிகால் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திஸ்ஸமஹாராம வைத்தியசாலையில் தற்போதுள்ள வடிகால் தொகுதியில் டெங்குக் குடம்பிகள் பரவலாக உள்ளனவென்பதையும்;

(ii) ஆதார வைத்தியசாலையொன்றுக்கு அவசியமான தொலைபேசி நிலையமொன்று இற்றைவரை அங்கு நிறுவப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) திஸ்ஸமஹாராம வைத்தியசாலையின் இந்த அவசியப்பாடுகளை நிவர்த்தி செய்ய எவ்வளவு காலம் எடுக்குமென அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2385/ '12

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரத்தில் நடைபெற்ற 2012 சுதந்திர தின விழாவின் போது கலந்து கொண்ட நடனக் கலைஞர்கள் எந்த நிறுவனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட சுதந்திர தின விழாவில் நடனக் கலைஞர்களாக எத்தனை பேர் கலந்துகொண்டார்கள் என்பதையும்;

(ii) சுதந்திர தின விழா நடைபெற்ற தினத்தில் அவர்களுக்கு பழுதடைந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அந்த உணவினை வழங்கியவர் யார் என்பதையும்;

(iv) அந்த நடனக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பழுதடைந்த உணவுக்குப் பதிலாக மாற்று தீர்வினை வழங்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்

(v) அந்த வழங்குனருக்கு மேற்கூறிய உணவுக்கான அனுப்பல் கட்டளையை வழங்கியவர் யார் என்பதையும்;

(vi) பழுதடைந்த உணவினை வழங்கியமை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்

அவர் இச்சசபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2963/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் பொதுசன சுகாதாரப் பரிசோதகர், குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர், ஆய்வுகூட உத்தியோகத்தர், மருந்தாளர், குடும்ப சுகாதார ஆலோசகர் ஆகிய பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) எனவே களுத்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் களுத்துறை சுகாதாரக் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற ஆஸ்பத்திரிகளின் சிகிச்சைப் பிரிவுகள், கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்களுக்கான சிகிச்சை பிரிவுகள், டெங்கு ஒழிப்புக் கருத்திட்டங்கள் போன்ற சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு விடயங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் தற்போது மேலே குறிப்பிடப்பட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிகளில் நிலவுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த மாவட்டத்தில் மேற்படி பதவிகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3036/ '12

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யான் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக உதவி வழங்கிய நாடு யாது;

(ii) இதன் பொருட்டு மேற்படி நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற உதவித் தொகை எவ்வளவு;

(iii) இதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது;

(iv) இதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசமாயுள்ள திகதி யாது;

(v) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக நன்மையடையும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நீர்ப்பாசன வசதிகளைப் பெறும் வயற் காணிகளின் பரப்பளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3103/ '12

7.

கௌரவ பி.ஹரிசன்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் காணப்படும்,

(i) மக்கள் வசிக்கும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அறுதி உறுதிக் காணித் துண்டுகள், குத்தகை காணித் துண்டுகள் மற்றும் அனுமதியற்ற காணித் துண்டுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை காணிபெறுநர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்படுவார்களா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களின் வதிவு அதே இடங்களிலேயே சட்டரீதியாக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஆதன வரி அல்லது வேறேதேனும் வரி அறவிடப்படுமா என்பதையும்;

(iv) மின்சார மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் போது இவர்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதிக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2322/ '12

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011, மற்றும் 2012 ஆகிய வருடங்களில் 9 மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களில் ஒவ்வொரு மாகாண சபையிலும் நிதி ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஒவ்வொரு மாகாண சபையினாலும் அரசாங்க ஒதுக்கீடுகளிலிருந்து செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) மாகாண சபையினால் ஈட்டப்பட்ட பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பெறுமதியையும்;

(iii) அரசாங்க கொடையாகவும், வருமானப் பங்காகவும் ஒவ்வொரு மாகாண சபையினாலும் பெறப்பட்ட தொகையையும்;

(iv) ஒவ்வொரு மாகாண சபையினதும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டன என்பதையும்;

தனித்தனயாக அவர் கூறுவாரா?

(இ) சொல்லப்பட்ட மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்திடம் இருந்த அதிகாரங்கள் தரமாகப் பெறப்பட்டதன் பின்னர்அவற்றின் வருமான சேகரிப்பு முறைமை முன்னேற்றமடைந்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"லக்ஷ்மன் வசந்த பெரேரா சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013) — (ஒதுக்கப்பட்ட இருபதாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 04)

* 2.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவெம்பர் மாதம் 14 ஆம் திகதிய 1784/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.12.04ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1776/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆம் திகதிய 1783/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

திவிநெகும சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2012, நவெம்பர் 06) [1].

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட இன்றைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு.எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு.எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ மொஹான் லால் கிரேரு

கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ லசந்த அளகியவண்ண

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன்

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ விஜித பேருகொட

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ எச். ஆர். மித்ரபால

கௌரவ லலித் திசாநாயக்க

கௌரவ விஜய தஹநாயக்க

கௌரவ சரண குணவர்தன

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ ஏ. பி. ஜகத் புஷ்பகுமார

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ சாந்த பண்டார

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ ஜனக பண்டார தென்னக்கோன்

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ஹுனைஸ் பாறூக்

கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ ஹேமால் குணசேக்கர

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ ஜானக பண்டார

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ ஏ. ஆர். எம் . அப்துல் காதர்

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ பிரேமலால் ஜயசேகர

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ காமினி விஜித் விஜிதமுணி த சொய்சா

கௌரவ பி. தயாரத்ன

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ காமினி லொகுகே

கௌரவ ஏர்ல் குணசேக்கர

கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ பி. பியசேன

கௌரவ குணரத்ன வீரகோன்

கௌரவ ஏ.எம். சாமிக்க புத்ததாஸ

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே

கௌரவ பிரபா கணேசன்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜீவன் குமாரணதுங்க

கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன

கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ திளும் அமுணுகம

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ டபிள்யூ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ பெருமாள் ராஜதுரை

கௌரவ சில்வேஸ்திரி அலன்றின்

கௌரவ (திருமதி) நிருபமா ராஜபக்ஷ

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ நவின் திசாநாயக்க

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ பசீர் சேகு தாவூத்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் பதவியிலிருந்து கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவை அகற்றுவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு பாராளுமன்றத்தின் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கும் பொருட்டு அரசியலமைப்பின் 107(2) உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேணை:-

1. செலின்கோ கூட்டுத் தொழில்முயற்சிக்குரிய கம்பனிகளான செலின்கோ ஸ்ரீ ராம் கெப்பிற்றல் மனேஜ்மன்ற், கோல்டன் கீ கிறெடிட் கார்ட் கம்பனி மற்றும் பினேன்ஸ் அன்ட் கரண்ரி கம்பனி லிமிட்றெட் ஆகிய கம்பனிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையே 262/2009, 191/2009 மற்றும் 317/2009 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்கள் தொடர்பிலான வழக்குகள் உயர் நீதிமன்றத்தின் பிறிதொரு நீதிபதிகள் குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வருகையில், மேற்கூறப்பட்ட வழக்குகளை மேற்படி நீதிபதிகள் குழுவிலிருந்து அகற்றி, தமது நீதிமன்றத்தில் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்து, மேற்படி வழக்குகளை விசாரணை செய்கின்ற நீதிபதிகள் குழுவின் தலைமை நீதிபதியாக செயலாற்றி அந்த வழக்குகளின் விடயப்பொருளாகவுள்ள செலின்கோ வீடமைப்பு மற்றும் ஆதனங்கள் கம்பனி என அழைக்கப்பட்ட, சிற்றி ஹவுசின் அன்ட் றியல் எஸ்டேட் கம்பனி லிமிட்றெட் மற்றும் செலின்கோ கொண்டொமீனியம் லிமிட்றெட் என அழைக்கப்பட்ட தற்போது டிரிலியம் ரெசிடென்சீஸ் என அழைக்கப்படும் நிறுவனத்திற்குரிய கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை, 153 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, 262/2009 ஆம் இலக்க உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் தொடர்பிலான வழக்கின் ஆதனங்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டத்திலிருந்து 2சீ/எப்2/பி4 ஆம் இலக்க மற்றும் 153/1-2/4 ஆம் ஆதன வரி இலக்க வீட்டை, அவுஸ்திரேலியாவின் மேற்கு அவுஸ்திரேலியா 6016, மவுண்ட் ஹோதோர்ன், எஜீனா வீதி, 127 ஆம் இலக்க இடத்தில் வசிக்கும் ரேணுகா நிரன்ஜலி பண்டாரநாயக்க மற்றும் கபில ரன்ஜன் கருணாரத்ன ஆகிய இருவராலும் வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு கே.பீ. அரோஷி பெரேராவின் 823 ஆம் இலக்க விசேட அற்றோனி தத்துவத்தைப் பயன்படுத்தி, ரேணுகா நிரன்ஜலி பண்டாரநாயக்க மற்றும் கபில ரன்ஜன் கருணாரத்ன ஆகிய இருவரினதும் பெயருக்கு கொள்வனவு செய்துள்ளதாதலாலும்;

2. மேலே கூறப்பட்ட ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றபோது, ஈட்டப்பட்ட விதத்தினை வெளிப்படுத்த முடியாத ரூபா 19,362,500 பணத் தொகையை மேற்படி ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், மேற்படி ஆதனத்தை விற்பனை செய்த சிற்றி ஹவுசின் அன்ட் றியல் எஸ்டேட் கம்பனி லிமிட்றெட் மற்றும் டிரிலியம் ரெசிடன்சீஸ் கம்பனிக்கு காசாகச் செலுத்தியுள்ளதாதலாலும்;

3. என்டீபி வங்கியின் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள கிளையில் 106450013024, 101000046737, 100002001360 மற்றும் 100001014772 ஆகிய கணக்குகளில் 2011 ஏப்பிரல் 18 முதல் 2012 மார்ச் 27 வரையிலான காலத்தினுள் ஏறத்தாழ ரூபா 34 மில்லியன் வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்ததன் பின்னர் அத் தகவலை நீதித்துறை அலுவலர் ஒருவரால் வழங்கப்பட வேண்டிய வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடாதிருந்ததாதலாலும்;

4. மேலே கூறப்பட்ட என்டீபி வங்கிக் கிளையின் கணக்குகளான 106450013024, 101000046737, 100002001360, 100001014772, 100002001967, 100101001275, 100110000338, 100121001797 மற்றும் 100124000238 இலக்கங்களையுடைய ஒன்பது கணக்குகள் உள்ளிட்ட பல்வேறு வங்கிகளிலும் இருபதுக்கும் அதிகமான வங்கிக் கணக்குகளைப் பேணிவந்து, அத் தகவல்களை நீதித்துறை அலுவலர் ஒருவரால் வழங்கப்பட வேண்டிய வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடாதிருந்ததாதலாலும்;

5. தற்போது கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் முன்னேயுள்ள 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் / அல்லது ஊழல் பற்றிய குற்றங்கள் தொடர்பிலான வழக்கில் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் சட்ட ரீதியான கணவரான திரு. பிரதீப் காமினீ சுராஜ் காரியவசம் சந்தேக நபராக காணப்படுவதாதலாலும்;

மேலே கூறப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள மேற்கூறிய நீதிமன்றத்தின் நீதவானை இடமாற்றிய, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அகற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ள நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை, அரசியலமைப்பின் 111 ஈ(2) உறுப்புரையின் பிரகாரம் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க ஏற்றிருப்பதாதலாலும்,

மேற்கூறிய நீதிமன்றத்தினால் பேணப்பட்டு வருகின்ற நீதிமன்ற அறிக்கைகள், பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களைப் பரிசோதிக்கின்ற அதிகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் அரசியலமைப்பின் 111 ஏ (3) உறுப்புரையின் கீழ் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாதலாலும்;

மேலே கூறப்பட்டவாறு கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் சட்ட ரீதியான கணவரான திரு. பிரதீப் காமினீ சுராஜ் காரியவசத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஏற்புடையதான வழக்கின் காரணமாக பிரதம நீதியரசர் பதவியில் தொடர்ந்தும் செயலாற்றுவதற்கு மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க தகுதியற்றவராதலாலும், பிரதம நீதியரசர் பதவியில் இவர் தொடர்ந்தும் செயலாற்றுவதன் காரணமாக நீதி நிருவாகச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தடையாயிருப்பதாலும் மற்றும் நீதி நிருவாகம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் அதன் மூலம் மீறப்படுவதாலும் மற்றும் நீதி நிறைவேற்றப்படுதல் மட்டுமன்றி நீதி நிறைவேற்றப்படுவதென்பது புலப்படக்கூடியதாயிருத்தல் வேண்டுமென்பதாதலாலும்;

6. முதனிலை நீதிமன்றங்களின் மூப்புநிலை அலுவலர்களிலிருந்து நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் நியமிக்கப்படுதல் வேண்டுமென அரசியலமைப்பின் 111 ஏ உறுப்புரையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் என்ற வகையில் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளராக அவரது பதவிநிலையிலிருந்து செயலாற்றி, முதனிலை நீதிமன்றங்களில் தகுதிவாய்ந்த மூப்புநிலை நீதித்துறை அலுவலர்கள் உள்ளபோது நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக அவ்வாறல்லாததொரு அலுவலரான திரு. மஞ்ஜுல திலகரத்னவை நியமித்ததன் மூலம் நீதித்துறை அலுவலர்களது மூப்புரிமை கவனத்திற்கொள்ளப்படாததன் ஊடாக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் செயலாற்றி அரசியலமைப்பின் 111ஏ உறுப்புரையை மீறியுள்ளாராதலாலும்;

7. 2/2012 மற்றும் 3/2012 ஆம் இலக்க உயர் நீதிமன்ற விசேட தீர்ப்புகள் தொடர்பில் அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் கீழான அரசியலமைப்பு நியாயாதிக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி அதே நேரத்தில் பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோது, நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவொன்றின் பிரதியை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு ஒப்படைத்தலானது அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நிறைவு செய்வதாகும் என்பதாக மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க நீதிமன்றத்தில் விசேட தீர்பொன்றை வெளியிட்டதன் மூலம் அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையைக் கவனத்திற்கொள்ளாது மற்றும் / அல்லது முரணாகச் செயலாற்றியுள்ளாராதலாலும்;

8. 5/91, 6/91, 7/91 மற்றும் 13/91 ஆம் இலக்க உயர்நீதிமன்ற விசேட தீர்ப்புகளின்போது உயர்நீதிமன்றத்தால் வரைவிலக்கணமளிக்கப்பட்டுள்ளவாறு அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய செயல் நடைமுறைக்கு இணங்கச் செயலாற்றுதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மேலே கூறப்பட்ட கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க மேற்கூறிய உறுப்புரையை மீறியுள்ளாராதலாலும்;

9. கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது அவரது நியமனத்தை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட சனாதிபதிச் சட்டத்தரணி எட்வட் பிரென்சிஸ் விலியம் சில்வா மற்றும் மேலும் மூவர் எதிர் ஷிராணி பண்டாரநாயக்க (1992 இலங்கை புதிய சட்ட அறிக்கை 92) அடிப்படை உரிமை மீறல் வழக்கின்போது உயர்நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட பெரும்பான்மைத் தீர்ப்பைக் கவனத்திற்கொள்ளாது உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் மேற்கூறிய தீர்ப்புக்கு எதிராகச் செயலாற்றியுள்ளாராதலாலும்;

10. உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆவதற்கு முன்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் விரிவுரையாளராக இருந்தபோது, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்த Groundview எனப்படும் ஊடக வெளியீட்டுப் பிரிவு உரித்தான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எனப்படும் நிறுவனத்தினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 02/2012 ஆம் இலக்க உயர்நீதிமன்ற விசேடத் தீர்ப்பு மனுவை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளாராதலாலும்;

11. பிரதம நீதியரசர் பதவியை வகிக்கின்றவரும் அதனூடாக அரசியமைப்பின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை வகிக்கின்றவருமான கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவதிலுள்ள தகைமையை ஆட்சேபித்த, சனாதிபதிச் சட்டத்தரணி எட்வட் பிரென்சிஸ் விலியம் சில்வா மற்றும் மேலும் மூவர் எதிர் ஷிராணி பண்டாரநாயக்க (1992 இலங்கை புதிய சட்ட அறிக்கை 92) வழக்கின்போது, மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் நியமனத்திற்கு எதிராக நீதவான் குருப்புகே பீட்டா ஆன் வர்ணசூரிய சுவர்ணாதிபதியின் சகோதரரான சட்டத்தரணி எல்.சீ.எம். சுவர்ணாதிபதி என்பவர் மனுவொன்றைச் சமர்ப்பித்ததன் காரணமாக, மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க மேற்கூறிய நீதவான் குருப்புகே பீட்டா ஆன் வர்ணசூரிய சுவர்ணாதிபதிக்கு தொந்தரவு செய்துள்ளாராதலாலும்;

12. பிரதம நீதியரசர் பதவியை வகிக்கின்றவரும் அதனூடாக அரசியமைப்பின் 111ஈ (2) உறுப்புரையின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை வகிக்கின்றவருமான கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க, அரசியலமைப்பின் 111ஏ உறுப்புரையின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அவரது நியாயாதிக்கத்தைத் தாண்டிச் செயலாற்றி, நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேவுக்கு தனது சட்டரீதியிலான உரிமைகளைச் செயற்படுத்துவதற்கு முன்னர் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுமாறு கட்டளையிட்டதன் மூலம், நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. மஞ்ஜுல திலகரத்ன இவரைத் துன்புறுத்தியமை தொடர்பில் பொலீஸில் முறைப்பாடு செய்வதற்கான, நீதவான் ரங்கனீ கமகேயின் சட்டத்தின் உதவியை நாடுவதற்குள்ள உரிமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

13. மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் என்ற வகையிலும் அதனூடாக அரசியலமைப்பின் 111ஈ(2) உறுப்புரையின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையிலும் செயலாற்றி தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி, நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேவுக்கு பொலீஸ் பாதுகாப்பைப் பெறுவதற்கு முன்னர் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுமாறு கட்டளையிட்டு, அவர் பொலீஸ் பாதுகாப்பைப் பெறுவதற்குள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுத்துள்ளாராதலாலும்;

14. தனது சட்ட ரீதியான உரிமையைச் செயற்படுத்தி நீதவான் ரங்கனீ கமகே பொலிஸ் மாஅதிபரிடம் பாதுகாப்புக் கோரியமை தொடர்பில் ஏன் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படாதிருத்தல் வேண்டும் என்பது பற்றி மேற்கூறிய நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேயிடம் விடுவிப்புக்கான காரணங்களை வினவி நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் செயலாற்றி கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக கடிதமொன்றை அனுப்பியுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் மூலம்,—

i. துர்நடத்தை அல்லது பிரதம நீதியரசர் பதவியை வகிப்பவருக்கு தகாத விதத்திலான நடத்தை உறுதிசெய்யப்படுவதாதலாலும்,

ii. நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகக் கூடியதான விடயங்கள் தொடர்பிலான வினாவெழுப்புதல்களுக்கு அல்லது கருத்துவேறுபாடுகளுக்கு உள்ளாகக்கூடியதான விடயங்கள் தொடர்பில் ஏற்புடையதான மற்றும் / அல்லது ஏற்புடையதாகக்கூடிய விடயங்கள் தொடர்பில் செயலாற்றியுள்ளாராதலாலும்;

iii. நீதி நியாயம் வழங்குதல் தொடர்பில் நிர்ப்பந்தங்களைச் செய்துள்ளாராதலாலும்;

iv. வழக்குத் தரப்பினர்கள் பக்கச்சார்பு மற்றும் / அல்லது பக்கச்சார்பின்மை தொடர்பிலான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு வாய்ப்புள்ளதான ஏதுக்கள் உருவாகலாமென்பதாதலாலும்;

முழுமையாகவே உயர்நீதிமன்றத்தையும் குறிப்பாக பிரதம நீதியரசர் பதவியையும் அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளார்.

ஆதலால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துர்நடத்தைக் குற்றச்சாட்டுகளின் காரணமாக, மேற்படி துர்நடத்தைக் குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரணை நடத்தி மேற்படி குற்றச்சாட்டுகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவை எண்பிக்கப்பட்டுள்ளதாக தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் பட்சத்தில், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவை அகற்றுவதற்கானதொரு பிரேரணையை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கக்கூடியவாறு தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென, மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், அரசியலமைப்பின் 107(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதான 107(2) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரமும், 78அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரமும் பிரேரிக்கின்றோம்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---